# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590


**ஆணை நாள்: 17.11.2020**

**முன்னிலை**

**திரு. ச.த. தமிழ்குமார், B.A., B.L.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**வழக்கு எண்.NC2892/F/2019 (SA3244/F/2018)**

திரு. மு. லோகநாதன் … மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நெடுஞ்சாலைத்துறை,
கோயமுத்தூர் - 641 018. … பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 04.12.2017 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 13.01.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 03.04.2018 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 28.05.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 10.12.2019 |

******

# ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 28.05.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை 7 தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் முழுமையான தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு. மு. லோகநாகன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ள

இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு து. சிற்றரசு, பொதுத் தகவல் அலுவலர் கோட்டப்பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத்துறை, கோயமுத்தூர் - 641 018 ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 04.02.2017 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், கோயமுத்தூர் மாநகரம், அவிநாசி சாலை, அண்ணா சிலை சந்திப்பில் புதிதாக வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர்களான எம்.ஜி.ஆர் மற்றும் ஜெ. ஜெயலலிதா ஆகியோர்களின் முழு உருவ சிலைகளை, ஏற்கனவே அவ்விடத்தில் நிறுவப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் C.N. அண்ணாதுரை அவர்களின் முழு உருவ சிலையுடன் சேர்த்து அமைப்பதற்கு நெடுஞ்சாலைத் துறையிடம் அனுமதி அல்லது ஆட்சேபனையின்மை சான்று கோரப்பட்டதா? ஆம், எனில், யார் எந்த தேதியில் அனுமதி கோரியிருந்தார்கள் என்றும் கோயமுத்தூர் மாநகரம், அவிநாசி சாலை, அண்ணா சிலை சந்திப்பில் புதிதாக வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர்களான எம்.ஜி.ஆர் மற்றும் ஜெ.ஜெயலலிதா ஆகியோர்களின் முழு உருவ சிலைகளை அமைப்பதற்கு நெடுஞ்சாலைத் துறை அனுமதி அல்லது ஆட்சேபனையின்மை சான்று வழங்கியுள்ளதா? ஆம், எனில் நெடுஞ்சாலைத்துறை வழங்கிய அனுமதி அல்லது ஆட்சேபனையின்மை உத்தரவின் நகலை வழங்குமாறும் மற்றும் கோயமுத்தூர் மாநகரம், அவிநாசி சாலை, அண்ணா சிலை சந்திப்பில் புதிதாக வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர்களான எம்.ஜி.ஆர் மற்றும் ஜெ.ஜெயலலிதா ஆகியோர்களின் முழு உருவ சிலைகளை ஏற்கனவே இருந்த C.N. அண்ணாதுரை அவர்களின் சிலையுடன் சேர்த்து நிறுவுவதற்கு தமிழ்சாணட அரசு அரசாணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா? ஆம், எனில் அந்த அரசாணையின் நகலை வழங்குமாறு கோட்டப்பொறியாளர், கட்டுமனம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத்துறை, கோயமுத்தூர் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 03.01.2018, தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தான் கோரிய தகவல்களுக்கு சரியான பதில் வழங்கவில்லை என தெரிவித்தும், தான் கோரிய தகவல்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கவும் கேட்டு, 13.01.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் 25.01.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களை முழுமையாக வழங்கவில்லை என தெரிவித்தும், தனக்கு உரிய தகவல் கிடைத்திட ஆவண செய்திட கேட்டும், பிரிவு 19(3)ன் கீழ் 30.04.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 28.05.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA3244/F/2018** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 10.12.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (17.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலரும் மேல்முறையீட்டாளரை நேரில் அலுவலகத்திற்கு அழைத்து தகவல்கள் வழங்கியதாக தெரிவித்தார். மேலும் தகவல்கள் பெறப்பட்டதற்கு கடிதம் பெறப்பட்டதாகவும் ஆணையத்தில் தெரிவித்தார்.

ஆணையம் இதனை பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை செய்ய முகாந்திரம் இல்லையென கருதி இக்கோப்பை முற்றாக்கப்படுகிறது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.NC2892/F/2019 (SA3244/F/2018)</u>**

<u>பொது அதிகார அமைப்பு</u>
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நெடுஞ்சாலைத்துறை,
கோயமுத்தூர் - 641 018.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>
திரு. மு. லோகநாதன்,
வழக்கறிஞர்,
தலைவாசல் காம்ப்ளக்ஸ்,
3வது தளம், 525, கிராஸ்கட் ரோடு,
கோயமுத்தூர் - 641 012.

Copy to: Judgement File / Spare
JE/PA 19.11.2020